Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 35 இதழ் - 11 நவம்பர் - 2022

தனிப்பிரதி
ரூ.10/-



## நாகப்பட்டினத்தில் அக்டோபர் 30-ம் தேதி நடந்த “எக்லீசியா ட்ரஸ்ட்” இலவச மருத்துவ முகாமின் போது...











## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 3 |
| 2. அற்புதங்கள் எங்கே | 11 |
| 3. பெண்கள் பகுதி | 13 |
| 4. வாலிபர் பகுதி | 19 |
| 5. சிறுவர் பகுதி | 22 |
| 6. கர்த்தரை நாம் எப்படி... | 24 |
| 7. சரியான மனிதன் செய்த... | 27 |
| 8. இசைக்கருவிகள் | 32 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity
Vol.35 November - 2022 Issue - 11

ஆசிரியர் உரை

# என் தலையை உயர்த்துகிறவர்

இரண்டு நிலைப்பாடுகளுக்கு இடையே காணப்படும் பெரும் வேறுபாட்டை எடுத்துரைப்பதற்கு நம் பேச்சு வழக்கில் பயன்படுத்தும் ஓர் உதாரணம், ''அது மலைக்கும், மடுவுக்கும் உள்ள வேறுபாடு போன்றது'' என்பது. நம் சமுதாய வாழ்வின் பல கட்டங்களில் அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்ப இப்படிப் பேசவே செய்கிறோம். இப்பொருளை ''தலையை உயர்த்துவதற்கும், தலையைத் தாழ்த்துவதற்கும்''நாம் தாராளமாகப் பயன்படுத்த முடியும். ஆம், மலைக்கும், மடுவுக்கும் உள்ள வேறுபாடு இந்த இரண்டு நிலைப்பாடுகளுக்கு இடையே உள்ளது. எப்படியெனில், ஒருவன் தலையை உயர்த்தியிருப்பது கனத்துக்கும், தாழ்த்தி இருப்பது கனவீனத்துக்கும், உயர்த்தியிருப்பது பெருமைக்கும், தாழ்த்தியிருப்பது சிறுமைக்கும், உயர்த்தியிருப்பது தைரியத்துக்கும், தாழ்த்தியிருப்பது கோழைத்தனத்துக்கும், உயர்த்தியிருப்பது மகிழ்ச்சிக்கும், தாழ்த்தியிருப்பது துக்கத்திற்கும் அடையாளமாகவே பார்க்கப்படும். இக்கூற்றில் அநேகமாக நமக்கு மாறுபட்ட கருத்து இருக்காது என நம்புகிறேன்.

இப்படி மானிடர் அனைவருக்கும் பொதுவாகக் காணப்படும் இந்த அனுபவம், தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற தாசன் [அப் 13:22] என்று ஆவியானவரால் அங்கீகரிக்கப்பட்ட தாவீது அரசனையும் விட்டு வைக்கவில்லை. ஆம், தன் ஆட்சிப் புகழின் உச்சியிலும், செல்வத் திரட்சியின் மத்தியிலும் ஒய்யாரமாக வலம் வந்து கொண்டிருந்த காலத்தின் ஒரு கட்டத்தில், அவனுக்கு எதிரான காரியங்கள் கை மீறிப்போன ஓர் எக்கச்சக்க சூழலில், வேறு வழி தெரியாமல், தன் தலையை மூடி முக்காடிட்டு, தனக்கு உண்மையாய் உள்ள ஒரு சிறு படையோடு வெறுங்காலில் தான் கட்டின எருசலேமை விட்டு ஓடிப்போக நேர்ந்தது. இக்கட்டான அந்த நேரங்களில் அவன் பாடின பாடல்களில் ஒன்றுதான் சங்கீதம் மூன்று. அவனுக்கு எதிரான காரியங்கள் தான் கை மீறிப் போனதே தவிர, தேவன் மீதான அவன் விசுவாசம் அவனுடைய முழுக்கட்டுப்பாட்டில்

தான் இருந்தது. ஆம், அது அப்படித்தான் என்பதை 8 வசனங்கள் கொண்ட அச்சங்கீதத்தில் காணமுடியும். குறிப்பாக, வசனங்கள் 3,4ல் தேவனிடத்தில் அவனுக்கு இரட்சிப்பு இல்லையென்று, என் ஆத்துமாவைக் குறித்துச் சொல்லுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள், **ஆனாலும், கர்த்தாவே நீர் என் கேடகம், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர்** என்று பாடியுள்ளான்.

சரி, தாவீது அரசனுடைய வாழ்வின் எந்தச் சந்தர்ப்பத்தில் இப்படி நடந்தது, ஏன் நடந்தது என்பதை அறிந்துகொள்ள நமது ஆசானின் ஆசாரப்படி இதன் பின்னணிக்குள்ளாகக் கடந்து வந்து விடுவோம்

கட்டுப்பாடில்லாமல் எட்டு மனைவிகளைக் கட்டிக் கொண்ட தாவீதுக்கு பதினெட்டுக்கும் குறைவில்லாத பிள்ளைகள். தாவீதுக்கு அகினோவாம் மூலம் பிறந்த அலைபாயும் மனது கொண்ட **அம்னோன்** முதல் பிள்ளை. மக்காளின் மூலம் பிறந்த அடங்காப் பிள்ளை **அப்சலோம்** மூன்றாம் பிள்ளை. அடங்காதவனும், தன்நிலை அறியாதவனுமாயிருந்த இந்த அப்சலோமைப் போல் அழகுள்ளவனும், மெச்சிக்கொள்ளப்படத் தக்கவனும் இஸ்ரவேலில் ஒருவனும் இல்லையாம். உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் பழுது ஒன்றுமில்லை. இப்படி இவனுக்கிருந்த இந்தக் கொள்ளை அழகால் அவனுக்குப் பத்துக் காசுக்கு பயனில்லை. பாதை மாறிய அவன் பயணம் பாதியிலேயே அந்தரத்தில் முடிந்துபோனது.

இந்த அழகுள்ள அப்சலோமுக்கு சௌந்தரியமுள்ள சகோதரி ஒருத்தி இருந்தாள். அவள் பெயர் தாமார். இவள் மீது தாவீதின் முதல் மகனான அம்னோன் முறை தவறிய மோகம் கொண்டான். இந்த அம்னோனுக்கு யோனதாப் என்ற பொல்லாத சிநேகிதன் இருந்தான். அவன் மகா தந்திரவாதி. பொதுவாக, தந்திரசாலிகள் நேர்மைக்கும், நேர்வழிக்கும் கட்டுப்படாதவர்களாகவே இருப்பார்கள். இந்த யோனதாபும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. இவனுடைய துர் ஆலோசனையில் சிக்கிக்கொண்ட அம்னோன் தாமாரிடத்தில் அத்துமீறி நடந்து கொண்டான். இதைக் கேள்விப்பட்ட அடங்காப் பிள்ளை அப்சலோம் பொங்கி வந்த ஆத்திரத்தை சாமர்த்தியமாக அடக்கிக் கொண்டு, அவனுக்குத் தக்க பதிலடி கொடுக்க இரண்டு ஆண்டுகள் காத்திருந்தான் (2சாமு 13அதிகாரம்). அந்நாட்களில் இருந்த வழக்கப்படி ஆடுகளை மயிர் கத்தரிக்கும் நிகழ்வுக்கும், அதைத் தொட்டுவரும் விருந்துக்கும் வருமாறு தாவீது ராஜாவையும், ராஜகுமாரர் எல்லோரையும் வருந்தி அழைத்தான். ராஜாவுக்குப் போக மனதில்லை. ஆனாலும், போகட்டும் என்று அம்னோனையும், மற்றவர்களையும் அனுப்பி வைத்தான் விருந்து முடிந்த நிலையில் என்ன செய்ய வேண்டும் என்று அப்சலோமின் ஊழியர்களுக்கு கனகச்சிதமான உத்திரவு இருந்ததால், தீட்டிய திட்டத்தின்படி அம்னோன் அன்றைய தினம் கொல்லப்பட்டு பழி தீர்க்கப்பட்டான் (13:29). தன் சத்துவத்தின் முதல் பலனாகிய அம்னோனை அநியாயமாய் பறிகொடுத்த தாவீது தினந்தோறும் தன் குமாரனுக்காகத் துக்கித்துக் கொண்டிருந்தான் (13:37), தன் தகப்பனுடைய உணர்வுகளை நாடி பிடித்த அப்சலோம்,

தனக்குக் கேடு நேராதபடி பார்த்துக்கொள்ள, தாவீதின் ஆட்சி அதிகாரத்துக்கு அப்பாலுள்ள தன் தாய்வழிச் சொந்தங்கள் உள்ள [13:37] கேசூருக்கு ஓடிப்போய் மூன்று ஆண்டுகள் தஞ்சம் அடைந்தான். ஆன்மீக ரீதியில் அவன் கெட்டுக் குட்டிச் சுவராகி எந்த நீதி, நியாயத்துக்கும் கட்டுப்படாமல், பெற்ற தகப்பனுக்கு எதிராகச் செயல்படுவதற்கு, யேகோவா வணக்கத்திற்கு அந்நியப்பட்டுப்போன இந்த மூன்று ஆண்டுகள் அடித்தளமிட்டிருக்குமே?

பிறகு யோவாபுடைய சாதுரியமான அணுகுமுறையால், அப்சலோம் மீதிருந்த இறுக்கத்தை தாவீது தளர்த்தி [14:1–20], அப்சலோம் நாடு திரும்ப அனுமதித்தான். ஒருவேளை அவனை மன்னித்து ஏற்றுக்கொள்ள மனமிரங்கினாலும், அவன் நிமித்தம் ஏற்பட்ட காயம் இன்னும் ஆறாமல் இருந்ததால், **என் முகத்தில் முழிக்க வேண்டாம்** என்று திட்டமாய் கூறிவிட்டான் [14:24]. இப்படியாக இரண்டு வருட காலம் கழிந்தது. இதற்கு முடிவுகட்ட அடங்காப் பிள்ளை அப்சலோம் இன்னொரு திட்டத்தைத் தீட்டினான். தனக்கு ஆதரவுக்கரம் நீட்டி, தன் தகப்பனிடத்தில் தனக்காகப் பட்சமாய் பேசி, தனக்கு மறுவாழ்வு தந்த யோவாபை ஓர் அக்கிரமச் செயல் மூலம் மிரட்டிப் பணிய வைத்து, தன் தகப்பனாகிய தாவீதுக்கு முன்பாக ஓர் நாடகமாடி ராஜாவுக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கினான் . அப்பொழுது ராஜா அப்சலோமை முத்தமிட்டான் [14:33]. மன்னிக்கும் சுபாவமும், இரக்க குணமும் கொண்ட தேவ மனிதர்களை ஏமாற்றுவது சுலபம் போல் தெரிகிறது. இப்படித்தானே யோசுவா ''கிபியோனின் குடிகளிடம்'' ஏமாந்தான் [ யோசுவா 9:1–15].

அடங்காதவனும், அக்கிரமச் சிந்தை கொண்டவனுமாயிருந்த அப்சலோமின் ஆட்டம் இதன் பிறகு சூடு பிடித்தது. ஆம், தன்னை மன்னித்து, முத்தமிட்டு ஏற்றுக்கொண்ட அப்பனுக்கு விரோதமாக செயல்படத் துவங்கினான். தான் ராஜாவைக் காட்டிலும் நல்லவன் என்றும், மக்கள் நலனில் முழு அக்கறை கொண்டவன் என்றும் தந்திரமாய் பேசி வஞ்சகமான முறையில் மக்களுடைய இருதயங்களைக் கவர்ந்து கொண்டான், பிறகு, கர்த்தருக்குத் தான் செய்த பொருத்தனையை நிறைவேற்ற வேண்டும் என்று பச்சைப் பொய் சொல்லி, பக்தி வேடம் போட்டு ராஜாவின் அனுமதியை நல்லவன் போல் பெற்று, இன்னொரு சதியின் மூலம் எப்ரோனில் ராஜாவாக அறிவிக்கப்பட ஏற்பாடு செய்தான். தாவீதின் ஆலோசனைக்காரனான அகிதோப்பேல் கூட இவனுடைய சதிவலையில் விழுந்திருக்கிறான் என்றால் இந்த அப்சலோம் எவ்வளவு கில்லாடி என்று பாருங்கள். திருவாளர் பொது ஜனம் எல்லாக் காலத்திலும் ஒரே விதமாகத்தான் இருந்துள்ளார்கள் என்பது ஆச்சரியமாக உள்ளது. நன்மைக்கும், தீமைக்கும், நியாயத்துக்கும், அநியாயத்திற்கும் வேறுபாடு தெரியாமல், தீமையின் பக்கம், அநியாயத்தின் பக்கம் அணிவகுத்து நின்றுள்ளார்களே! இஸ்ரவேலில் ஒவ்வொருவருடைய இருதயமும் அப்சலோமைப் பற்றி போனதாக காண்கிறோமே [2 சா 15:12]. என்னடா உலகம் இது?

இப்படி காதுக்கு வந்தெட்டின விபரங்களின் வீரியத்தைப் புரிந்து கொண்ட தாவீது, அடங்காப் பிள்ளை அப்சலோமின் அடுத்த கட்ட நகர்வு எப்படி வேண்டுமானாலும் இருக்கும் என்பதைத் தாமதமின்றி ஏற்றுக்கொண்டு, **எருசலேமிலே தன்னிடத்திலுள்ள தன்னுடைய எல்லா ஊழியக்காரரையும் நோக்கி: எழுந்து ஓடிப்போவோம், இல்லாவிட்டால் நாம் அப்சலோமுக்குத் தப்ப இடமில்லை. அவன் தீவிரித்து நம்மிடத்தில் வந்து, நம்மைப் பிடித்து, நம்மேல் பொல்லாப்பு வரப் பண்ணி, நகரத்தைப் பட்டயக் கருக்கினால் சங்காரம் பண்ணாதபடிக்குத் தீவிரமாய் புறப்படுங்கள் என்றான்.** [2 சாமு 15:14] ஒரு சமயத்தில் தனி ஆளாக சிங்கத்தையும், கரடியையும் எதிர்த்துப் போராடி, தாடையைப் பிடித்து தரையில் அடித்துக்கொன்ற தாவீது, அரக்கன் கோலியாத்தை அப்படியே மல்லாக்காக விழச் செய்த தாவீது, பெற்ற மகனுக்குப் பயந்து ஓடிப்போவது எவ்வளவு பரிதாபம் பாருங்கள்!

இப்படி தாவீதும் அவனோடிருந்தவர்களும் எருசலேமை விட்டு வெளியேறி கீதரோன் ஆற்றைக் கடந்து, முகத்தை மூடி, வெறுங்காலால் நடந்து, அழுது கொண்டே ஒலிவ மலையின் மேல் ஏறிப் போனார்கள் [2 சா 15:30]. இந்த நிலையில் கூட தேவன் மீதான தன் நம்பிக்கையை தாவீது வெளிப்படுத்தாமலில்லை. பாருங்கள், ''ராஜா சாதோக்கை நோக்கி: தேவனுடைய பெட்டியை நகரத்திற்குத் திரும்பக் கொண்டுபோ; கர்த்தருடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நான் அதையும், அவர் வாசஸ்தலத்தையும் பார்க்கிறதற்கு **என்னைத் திரும்ப வரப்பண்ணுவார். அவர்: உன்மேல் எனக்குப் பிரியமில்லை என்பாராகில், இதோ இங்கே இருக்கிறேன்; அவர் தம்முடைய பார்வைக்கு நலமானபடி எனக்குச் செய்வாராக என்றான்** [15:25,25].

இப்படித் தன் அடுத்த கட்ட வாழ்வுக்கான நம்பிக்கை தகர்ந்து தரைமட்டமாகிப் போன வேளையில் தான், தாவீது சங்கீதம் 3–ஐப் பாடியுள்ளார். எப்படி யோபுவைப் பற்றிப் பேசும்போது இவன் என்ன மனிதனோ என்று சொல்லுகிறோமோ அதுபோன்று தான் இந்தத் தாவீதும். இந்த சங்கீதத்தில் தான் **கர்த்தர் என் தலையை உயர்த்துகிறவராயிருக்கிறார்** என்று உரக்கக் கூறினான். இப்படிப்பட்ட சங்கீதத்தில் வரும் முதல் நான்கு வசனங்களை ஆதாரமாகக் கொண்டு நமக்கான சில பாடங்களை இம்மாதம் கற்றுக்கெள்ள முயற்சிப்போம்.

## I. தாவீதுடைய எதிரிகளின் குற்றச்சாட்டுகள்

அப்சலோமுக்குப் பயந்து, தாவீது தலையில் முக்காடிட்டு, வெறுங்காலுடன் ஓடிப்போகையில் பாடின சங்கீதம் மூன்றின் முற்பகுதியிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற முதல் பாடம், தேவ மனிதர்களைப் பெலவீனப்படுத்தும் முயற்சிகளை சாத்தான் முன்னெடுப்பான் என்பது.

சங்கீதம் 3:1,2 வசனங்களைப் பாருங்கள்: **கர்த்தாவே, என் சத்துருக்கள் எவ்வளவாய்ப் பெருகியிருக்கிறார்கள்! எனக்கு**

**விரோதமாய் எழும்புகிறவர்கள் அநேகர். தேவனிடத்தில் அவனுக்கு இரட்சிப்பு இல்லையென்று என் ஆத்துமாவைக் குறித்துச் சொல்லுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள்**''. தாவீது தன் நிலை உணர்ந்தவனாகப் பாடின முதல் வசனத்தின் வரிகளில் உண்மை இல்லாமலில்லை. தேவ மனிதர்கள் எப்போதும் யதார்த்த நிலையை ஏற்றுக்கொள்வார்கள். அப்சலோம் தந்திர வார்த்தைகளால் இஸ்ரவேல் மக்களின் மனங்களைக் கொள்ளை கொண்டதால், ஜனங்கள் அப்சலோம் வசம் திரளாய்க் கூடினார்கள் (2சாமு 15:12). ஜனங்கள் அறிந்தும், அறியாமலும் (15:11) அவன் வஞ்சக வார்த்தைகளில் விழுந்து போனார்கள் என்பதை ஓரளவு சீரணிக்க முடிகிறது. ஆனால், அகிதோப்பேல் போன்ற தாவீதின் ஆலோசனைக்காரர்கள் கூட பச்சோந்திகளாக அணிமாறியிருக்கிறார்களே! கேவலமான மனிதர்கள் முக்கியமான இடங்களில் எப்போதும் இருந்திருக்கிறார்களே!

இதுவரை சரி, ஆனால், இரண்டாம் வசனத்தின் வரிகள், மிஞ்சின தந்திரத்தின் கூற்றுகள் என்பதை நாம் சொல்ல வேண்டிய அவசியமேயில்லை. சாத்தானின் **ஏவலாட்கள்** மூலம் வரும் வஞ்சக வார்த்தைகள் இவை. **தேவனிடத்தில் அவனுக்கு இரட்சிப்பு இல்லையாம்!** இப்படிச் சொன்னது ஓர் அப்சலோம் மாத்திரமல்ல, ஓர் அகிதோப்பேல் மாத்திரமல்ல, அநேகர் சொல்லியிருக்கிறார்கள். தேவ மனிதர்களின் நம்பிக்கையைப் பெலவீனப்படுத்தும் முயற்சியில் சாத்தான் எவ்வளவு கை தேர்ந்தவனாக இருக்கிறான் பாருங்கள். ஒரு பொய்யைத் தான் சொல்லுவதோடு நிற்காமல் ஏராளமானவர்களை வைத்துச் சொல்ல வும் வைக்கிறான். தேவன் உன்னைக் கைவிட்டு விட்டார் என்று ஏராளமானவர்களைக் கொண்டு சொல்ல வைக்கும்போது, ஒருவேளை அப்படித்தானோ, நிலைமையும் அப்படித்தானே இருக்கிறது என்று ஏமாந்து வீழ்ந்து போவார்கள் என்ற நப்பாசை தான். ஏதேன் தோட்டத்திலிருந்து இந்த விளையாட்டை விளையாடுபவனாச்சே!

ஆனால், அருமையானவர்களே! தேவ மனிதர்கள் ஏமாந்து போகக்கூடாது. தாவீதுக்கு நேர்ந்தது போன்ற சோதனைகள், துரோகங்கள், வேதனைகள், அவமானங்கள் நம்முடைய வாழ்விலும் வரலாம் ஒருவேளை அவைகள் நினைத்தே பார்க்க முடியாத அளவுக்குக் கூட இருக்கலாம். ஆனாலும், நாம் சோர்ந்து போக வேண்டியதில்லை. ஏனெனில், **தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார். அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்** (சங்.145:18-19). தேவனுக்குப் பயந்தவர்களுடைய கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார் என்று பொய்யுரையாத தேவனுடைய வார்த்தைகள் சொல்லும்போது, இந்தப் பிசாசின் மனிதர்கள், தேவன் அவனைக் கைவிட்டார் என்று சொல்லுவதும், தேவனிடத்தில் அவனுக்கு இரட்சிப்பு இல்லையென்று சொல்லுவதும் **எப்படிச் சரியாக இருக்கும்**?

அவர் எப்போதும் நம்மை இரட்சிக்கிறவராகவே இருக்கிறார். ஆயினும், அப்படி அவர் நம்மை இரட்சிக்க வேண்டுமானால், நமக்கு மறு உத்திரவு கொடுக்க வேண்டுமானால், நாம் அவருக்கு பயந்து வாழ்கிறவர்களாக இருக்கவேண்டும். அப்படி இருப்பதற்கு அவர் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவர் சித்தம் செய்ய நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும்!

## II. தாவீதின் அபார நம்பிக்கை:

அப்சலோமுக்கு பயந்து, தாவீது தலையில் முக்காடிட்டு, வெறுங்காலுடன் ஓடிப்போகையில் பாடின சங்கீதம் மூன்றின் முற்பகுதியிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற இரண்டாம் பாடம், தேவன் மீது எச்சூழலிலும் நம்பிக்கை வைக்க வேண்டும் என்பது.

தாவீதும், அவனோடிருந்தவர்களும் தலை தப்பித்தால் போதும் என்று ஓடிப்போனபோது, தேவனிடத்தில் அவனுக்கு இரட்சிப்பு இல்லையென்று கூட்டாகக் கொக்கரித்தவர்களுக்குப் பதிலாக, தாவீது இவ்வரிகளைப் பாடியுள்ளார். **ஆனாலும், கர்த்தாவே நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர்** [3:3] என்று.

தாவீது, யோபு, தானியேல் போன்ற தேவ மனிதர்களின் தனிச்சிறப்பு எந்தச் சூழலிலும் தேவன் மீதான நம்பிக்கையைப் பழுதில்லாமல் பார்த்துகொள்வது. பக்தன் யோபு தன் உயிரைத் தவிர எல்லாவற்றையும் பறிகொடுத்த நிலையிலும்,**அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன். ஆனாலும், என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணுவேன்** [யோபு13:15] என்று தெறிக்க விட்டான். கிட்டத்தட்ட இதற்கு இணையான ஒரு சூழலைத்தான் தாவீது அப்சலோம் மூலம் எதிர்கொண்டான். **எல்லாமே போச்சு, உயிர் மாத்திரம் இருக்கிறது. அதற்கும் பேராபத்து காத்திருக்கிறது.** இந்த நிலையிலும் என்ன சொல்லுகிறான். ஆனாலும், கர்த்தாவே, நீர் என் கேடகம், என் மகிமை, **என் தலையை உயர்த்துகிறவர்** என்று

கேடகம் என்பது பாதுகாப்பு தரும் ஒரு போர்க் கருவி. ஆபத்து எப்படி இருந்தால் எனக்கென்ன? கர்த்தர் என்னைப் பாதுகாக்கிறவர். நான் ஏன் பயப்பட வேண்டும் என்று கூறினான். தாவீது தன் வாழ்வின் அநேகக் கட்டங்களில், அதுவும் மிகவும் இக்கட்டான கட்டங்களில் தேவனால் பாதுகாக்கப்பட்டிருக்கிறான். ஒருபோதும் தேவன் இவனைத் கைவிடவில்லை. அந்த அனுபவம் தனக்கிருந்தபடியால், கீதரோன் ஆற்றைக் கடந்து ஓடிப்போகும்போதும், '' கர்த்தர் என் கேடகம்'' என்னைப் பாதுகாக்கிறவர் என்று கூறியுள்ளான். அத்தோடு நிறுத்தாமல், ''கர்த்தர் என் மகிமை'' என்றும் கூறியுள்ளார். மகிமை என்ற எபிரேய வார்த்தைக்கான பொருள்களில் ஒன்று, **எல்லாமும்** என்பது. அதாவது, **கர்த்தர் எனக்கு ''எல்லாமுமாக இருக்கிறார்** என்று கூறுகிறான். சில பேர் தங்களது இருப்பை அழகைக் கொண்டும், அறிவைக் கொண்டும், பணத்தைக் கொண்டும் இன்னும் பலவற்றைக் கொண்டும் அளவிடும்போது,

தாவீது தன் இருப்பைக் கர்த்தரை முன் வைத்து வெளிப்படுத்துகிறான். கர்த்தர் என் கேடகம், என் மகிமை என்று கூறுவதோடும் நிற்காமல், கர்த்தர் **என் தலையை உயர்த்துகிறவர்** என்று பெருமிதப்படுகிறார். எப்பொழுது இப்படிச் சொல்கிறார்? தன் தலையைத் தொங்கப் போட்டு, தலை தப்பித்தால் போதும் என்று ஓடும்போது. **என்னே நம்பிக்கை இது!** தலையை உயர்த்துவது என்பதின் பொருள், அவர் **எல்லாவற்றையும் மாற்றுகிறவர், தூக்கி நிறுத்துகிறவர்** என்பது. எவைகளெல்லாம் எனக்கு எதிராக இப்பொழுது இருக்கிறதோ அவைகள் அனைத்தும் மாறும், கர்த்தர் மாற்றுவார் என்று மார்தட்டுகிறான்.

அருமையானவர்களே! இது எந்தப் புதிய ஏற்பாட்டு வசனத்தை உங்களுக்கு நினைப்பூட்டுகிறது? பவுலடியார், **நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்** [2 தீமோ1:12] என்று பறைசாற்றுவதை நினைவுக்குக் கொண்டு வரவில்லையா? தேர்ந்த தேவ மனிதர்களில் விசுவாசத்தைப் பாருங்கள். இப்படிப்பட்ட நம்பிக்கை தான், தேவனுடைய பிள்ளைகளாக, இயேசுவின் சீடர்களாக வாழ விரும்புகிறவர்களுக்குத் தேவைப்படுகிறது. இன்னும் சொல்வதானால், இப்படிப்பட்ட நம்பிக்கை தான் தேவனால் நம்மிடம் எதிர்பார்க்கப்படுகிறது!

### III. **தாவீதின் நம்பிக்கை வீண் போகவில்லை**

அப்சலோமுக்குப் பயந்து, தாவீது தன் தலையில் முக்காடிட்டு, வெறுங்காலுடன் ஓடிப்போகையில் பாடின மூன்றாம் சங்கீதத்தின் முற்பகுதியிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற இன்னொரு பாடம், தேவன் மீதான நம்பிக்கை ஒருபோதும் வீண் போகாது என்பது.

தாவீது இங்கே சொல்வதைப் பாருங்கள், **நான் கர்த்தரை நோக்கி சத்தமிட்டுக் கூப்பிட்டேன்; அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்குச் செவி கொடுத்தார்** [சங்.3:4]. கர்த்தர் எனக்கு செவி கொடுப்பார்'' என்று கூறாமல் ''செவி கொடுத்தார்'' என்று சொல்கிறார். நான் சத்தமிட்டு ஏறெடுத்த விண்ணப்பம் தேவனால் **ஏற்கனவே** கேட்கப்பட்டாயிற்று, இனி எனக்குப் பயமில்லை என்பதே அதன் பொருள். பின்னாளில், எபிரெயர் ஆசிரியர் பேசும் **தைரியம்** தாவீதுக்கு வெகு காலத்துக்கு முன் ஓடிப் போகும்போதே வந்துவிட்டது. **அதினாலே நாம் தைரியங்கொண்டு கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே** என்று. [எபி.13] அத்தோடு, உன் நம்பிக்கை வீண் போகாது'' [நீதி23:18] என்றஞானியின் வார்த்தைகளும் தாவீதின் வாழ்வில் நிறைவேறியது. ஆம், ''கூஷி என்ற மனிதன் வந்து: **ராஜாவாகிய என் ஆண்டவனே, நற்செய்தி, இன்று கர்த்தர் உமக்கு விரோதமாயெழும்பின எல்லாரின் கைக்கும் நீங்கலாக்கி நியாயஞ் செய்தார் என்றார்** [2சாமு.18:31].

கர்த்தரை உண்மையாய் நம்புகிறவர்களுக்கு அவர் எப்பொழுதும் செவி கொடுக்கிறார். தனக்கு இக்கட்டான நாளில் தேவன் செவி கொடுத்ததை

எண்ணியே பின்னாளில், தன் சங்கீதங்களின் பல இடங்களில் இப்படியாகக் குறிப்பிட்டுள்ளார். கர்த்தர் என் பெலனும், என் கேடகமுமாயிருக்கிறார்; என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன்; ஆகையால், என் இருதயம் களிகூறுகிறது; என் பாட்டினால் அவரைத் துதிப்பேன் (சங்.28:7). இன்னும், சங்கீதம் 56:15ல் **ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய் என்று** பாடியுள்ளார்.

அன்பானவர்களே! தம்மை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு அவர் செவி கொடுக்கிறார் என்பது நமக்குப் பெரிய ஆறுதலையும், நம்பிக்கையையும் கொடுத்தாலும், கூப்பிடுகிற எல்லோருக்கும் அவர் செவி கொடுப்பதில்லை என்ற உண்மையை நாம் பார்க்கத் தவறிவிடக் கூடாது. இயேசுவால் சுகமாக்கப்பட்ட பிறவிக் குருடன், தான் சுகமாக்கப்பட்டது சம்பந்தமாகப் பரிசேயரோடு நடத்தின காரசார உரையாடலில், **பாவிகளுக்கு தேவன் செவி கொடுக்கிறதில்லையென்றும், ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து அவருக்கு சித்தமானதைச் செய்தால் தான் செவி கொடுப்பார்** (யோவான் 9:31) என்று பளிச்சென்று சொன்னான். இதே உண்மையைப் பேதுரு அப்போஸ்தலன் இப்படியாகத் தன் நிருபத்தில் வெளிப்படுத்தியுள்ளார். **கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது. தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது**(1 பேதுரு 3:12) என்று.

இந்த வசனங்களினடிப்படையில், நாம் ஒவ்வொருவரும் நம்மைப் பார்த்துக் கேட்க வேண்டிய கேள்வி, **நான் கர்த்தருடைய பார்வையில் எப்படிப்பட்டவனாக இருக்கிறேன்** என்பதே. நான் பாவியாக இருக்கிறேனா? அல்லது நீதிமானாக இருக்கிறேனா? தாவீது தேவ பக்தியுள்ளவனாக, நீதிமனாக இருந்து சத்தமிட்டுக் கூப்பிட்டபடியால் தான் மன்றாட்டு கேட்கப்பட்டது. நம்முடைய கூப்பிடுதலும் ஆபத்தான காலங்களிலும், சுகமான நாட்களிலும் கேட்கப்பட வேண்டுமானால், நாம் ஒவ்வொருவரும் நீதிமான்களாக மாறி தேவபக்தியுள்ளவர்களாக வாழ வேண்டும். பாவி என்ற நிலையிலிருந்து நீதிமான் என்ற உயர்வை பெறுவதற்கு நமக்குத் **தேவக்கிருபையும், கிறிஸ்துவின் நற்செய்தியும்** தேவனால் நமக்கு அருளப்பட்டிருக்கிறது (ரோமர் 3:24).

ஆக, இந்த உண்மையைப் புரிந்து, பக்தி வாழ்வில் நாம் செய்ய வேண்டியவைகளை கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டின் உபதேசப்படி செய்து இம்மையையும், மறுமையையும் பாதுகாப்பாய் வைத்துக்கொள்வோம். இதன் மூலம் **கர்த்தர் என் தலையை உயர்த்துகிறவர்** என்பதை உலகுக்கு அறிவிப்போம்! ஆமென்!!

✝

# அற்புதங்கள் எங்கே?

J.C. சோட்

அப்போஸ்தலர் சம்பந்தமாக நாம் இவ்விதம் வாசிக்கிறோம். அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார் (மாற்கு 16:20). எபிரெயர் ஆசிரியரும், ஆகையால் நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும். ஏனெனில், தேவதூதர் மூலமாகச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவருடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதி யாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பல விதமான பலத்த செய்கைகளினாலும் தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம் (எபி.2:1–4) என்று சொல்லுகிறார்.

அக்கால கட்டத்தில் புதிய ஏற்பாடு இன்னும் கொடுக்கப் படவில்லை. அற்புதங்களும், அடையாளங்களும், பலத்த செய்கைகளும், அப்போஸ்தலர்களின் செய்தியை உறுதிப்படுத்தும்படியாக நடத்தப்பட்டன. அல்லது அப்போஸ்தலர்கள் பேசின வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைகள் தான் என்பதை உறுதி செய்தன.

ஆனால், இன்றைக்கு நிலைமை எப்படி புதியஏற்பாடு பூரணமான நிலையில் நம்மிடம் இப்பொழுது உள்ளது. புதிய ஏற்பாட்டு வார்த்தைகள் உறுதிசெய்யப்பட்டாயிற்றா? நிச்சயமாக. ஆகையால், இப்பெழுது அற்புதங்களுக்கான தேவை இல்லை. தேவன் இன்று யாருக்கும் காட்சி தருவதுமில்லை மற்றும் எழுதிக் கொடுக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டுவிட்ட புதிய ஏற்பாட்டு வார்த்தைகளைத் தாண்டி யாரிடத்திலும் பேசுவதும்மில்லை. அவருடைய புத்தகத்தைத் தேவன் நமக்குத் தந்திருக்கிறார். அது தேவனுடைய செய்திதான் என்று ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டாயிற்று. ஆகையால், இன்று அந்த வார்த்தைகள் மூலமாக நம்மிடம் பேசுகிறார்.

ஒரு வேளை, இந்நாட்களில் தேவன் நம்மெல்லாரிடத்திலும் பேசாமல், தன்னிச்சையான முறையில் நேரிடையாக ஒருவரிடத்தில் பேசி, ஒருவர் மூலமாக அற்புதங்கள் நடத்தினால், அது தேவனிடத்தில் பட்சபாதம் உண்டு என்று பொருள்படுவதோடு வேதவசனங்களுக்கு முரண்பாடாகவும் இருக்கும். அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி **தேவன் பட்சபாதமுள்ளவரல்ல** என்றும், எந்த ஜனத்திலயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைக் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் (அப்.10:34, 35).

தேவன் இன்று அவருடைய குமாரன் மூலமாகப் பேசுகிறார். பூர்வ காலங்களில் பங்குபங்காகவும் வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூல மாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்க ளில் கமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண் டாக்கினார். ( எபி.1:1,2). அவன் பேசுகையில் இதோ ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது. என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமா யிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலி ருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று ( மத்.17:5). அத்தோடு இயேசு என்ன போ தித்தாரோ, என்ன நடப்பித்தாரோ அவைகள் நாம் வாசித்தறியும்படியாக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. அவைகள் எந்த நற்கிரியையையும் நடப் பிப்பிப்பதற்குப் போதுமானது. (2 தீமோ.3:16,17; 2; பேதுரு 1:3; யாக்.1:25). அவைகள் சொல்லும் சத்தியத்தை அறியும்படியாகவும், விசுவாசிக்கும்படி யாகவும் அதை வாசித்துப் படிக்க வேண்டும் (2தீமோ.2:15; யோவான்: 17:17; ரோமர்: 10:17). எந்த வகையிலும் இவைகளில் மாற்றம் செய்யப்படக் கூடாது ( வெளி.22:18,வெளி. ஆகையால், இன்றைக்கு அற்புதம் செய்கி றோம் என்று சொல்லுகிறவர்கள் ஏமாற்றுக்காரர்களாக இருக்கிறார்கள். ஏனெனில், இன்னும், உறுதி செய்யப்படும் படியாய் வேறு எந்தப் புதிய செய் தியையும் அவர்கள் தேவனிடமிருந்து பெறவில்லை.

அதுபோலவே, தேவனுடைய வார்த்தைகளுக்கு அப்பால் தேவன் தங்க ளிடம் பேசினதாக யாராவது சொன்னால், நான் ஏற்கனவே முன்னுரையில் குறிப்பிட்டது போல் ஒற்றுமை குறித்து தேவன் என்னிடம் பேசினார் என்று சொன்ன பாஸ்டர் பால் போன்று ஏமாற்றுப் பேர்வழிகளே! ஒற்றுமைக்காக இயேசு ஏற்கனவே ஜெபித்துள்ளார். அப்போஸ்தலர் காலந் தொட்டு ஒற்று மைக்கான திட்டத்தைப் புதியஏற்பாடு தன்னகத்தே கொண்டுள்ளது (யோ வான் 17;எபே.4:1-6). அப்படியிருக்கும்போது தேவன் ஏன் இந்த மனிதனி டத்தில் தனியாகப் பேசி, அப்படியொரு சிறப்புத் திட்டத்தை வித்தியாசமான முறையில் கொடுக்க வேண்டும்?

அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறியலாம் என்றும் வேதவசனங்கள் கூறுகிறது (மத்.7:16). இந்த பாஸ்டர் பால் வெறுமனே ஒரு பிரசங்கி தானேயொழிய வேத வசன தகுதியினடிப்படையில் சபை மூப்பர் அல்ல ( I தீமோ.3:1-7) வேதாகமம் சொல்லும் ஒரே சபைக்கு எதிராகத் தன்னை பெந்தெகொஸ்தே பாஸ்டர் என்று அழைத்துக் கொண்டு ஒற்றுமை யைப் பற்றி பேசுகிறார். இந்த மனிதர் கர்த்தர் தன்னிடம் நேரிடையாகப் பேசி னார் என்று போதிப்பதன் மூலம், தேவன் பட்சபாதமுள்ளவர் என்று சொல்லு வதோடு வேதாகமம் முழுமை பெற்ற ஒன்றல்ல என்றும் கூறுகிறார். இவை களெல்லாம் இவர் கள்ளப் போதகர் என்று அடையாளப் படுத்துகிறது.

தொடரும்...

✝

பெண்கள் பகுதி

# ஏலோஹீமுடனான மானிடத்தின் உறவு

**Betty Burton Choate**

**நா**ம் இரண்டு உலகங்களில் வாழ்கிறோம்: சரீர உலகம் மற்றும் ஆவியின் உலகம். நம்முடைய கண்களைத் திறந்து அழகாகப் படைக்கப்பட்டுள்ள இந்த சரீர உலகைப் பார்க்க முடிகிறது. விண் உலகையும், நம்மைச் சுற்றிலுமுள்ள உலகின் அழகையும். அத்தோடு, தாவரங்களையும், மிருகங்களையும், கடல் வாழ் உயிரினங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும் பார்க்கிறோம். இன்னும், நம்முடைய காரியங்களையும், நம்முடைய குடும்பத்திலுள்ள–தாய், தகப்பன், சகோதர, சகோதரிகளையும், பார்க்கறோம். இவைகளனைத்திலுமான அப்பட்டமான உண்மையாதெனில், சரீர உலகிலுள்ள அனைத்தும் ஓர் நாளில் மரித்து, இல்லாமல் போகும் என்பதுதான்.

ஆவிக்குரிய உலகை நாம் நம் சரீரக் கண்களால் பார்ப்பதில்லை. ஆனாலும், அது சரீர உலகைவிட உண்மைத் தன்மை கொண்டதாயிருக்கிறது. அதற்குக் காரணம் மரணமோ, அழிவோ அதற்கு இல்லை.

நம்முடைய கரங்களிலுள்ள வேதாகமத்திலிருந்து ஆவிக்குரிய உலகம் பற்றி நாம் அறிந்து கொள்கிறோம். அந்தப் புத்தகம் தேவனால் ஏவப்பட்டது (2 தீமோத்தேயு 3:16,17 ). வேதாகமம் காண்கிற எல்லாவற்றையும் படைத்தவரிடமிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ''**சேனைகளுடைய கர்த்தர்** பற்றிச் சொல்கிறது. (1 சாமு 1:3 தொடங்கி மல்கியாவின் முடிவு வரைக்கும் 268 முறை பழைய ஏற்பாட்டில் உள்ளது. **வார்த்தை** பற்றி 472முறை ஆதியாகமத்திலிருந்து – மல்கியா வரை ) **கர்த்தருடைய தூதன்** பற்றி ( 79 முறை ஆதியாகமம் – சகரியா ) பரிசுத்த ஆவியானவர் பற்றி ( 7 முறை யாத்திராகமம் – தானியேல் ). பழைய ஏற்பாட்டில் **தகப்பன்** பற்றி நாம் வாசிப்பதில்லை (சேனைகளுடைய கர்த்தரைக் குறிக்கும்படியாக அது சம்பந்தமாக 11முறை). குமாரன் (மானிடத்தோடு இடைபடும்படியாக **கர்த்தருடைய தூதன்** என்றும் அல்லது **வார்த்தையாக வந்தவர்** என்றும் அடையாளப்படுத்தப்பட்டு, ''சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறதாவது!''என்று கூறப்பட்டுள்ளது. அடையாளம் அறியப்படும்படியாக **ஏலோஹீம்** என்பது மிகப்பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது எபிரெய மொழியில் தேவன் என்பதற்கான பன்மை வார்த்தையாக இருந்து, தேவத்துவத்திலுள்ள மூவரையும் பொருள்படுத்துகிறது. சேனைகளுடைய கர்த்தர், வார்த்தை மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோர் – ஒரு சாரம், மூன்று நபர்கள், ஆனால், சமத்துவமாக!

மானிடம் பாவம் செய்தபடியால், மானிடருக்கும், அவர்களைப் படைத்த தேவனாகிய கர்த்தருக்குமிடையே ஒரு மிகப்பெரிய பிரிவினை ஏற்படுத்தப்பட்டுவிட்டது; பாவத்தின் விளைவாக தேவனுடைய படைப்புகளுக்கு மரண அபாயம் ஏற்பட்டுவிட்டது. ஆவிக்குரிய மரணத்தைத் தரும் இந்த நாசகர சூழல், அழியாத ஆத்துமாக்களோடு **அவருடைய சாயலில் படைக்கப்பட்ட** மனிதர்கள் நித்திய உலகத்தில் தன்னை உண்டாக்கின ஏலோஹீமுடன் ஒருபோதும் வர முடியாதபடி தடையை ஏற்படுத்தி விடும். இந்தத் தடையை நீக்கும்படியாய் மிகப் பிரம்மாண்டமான செயல் தேவத்துவத்தில் நடந்தது. அவர்களால் படைக்கப்பட்ட படைப்புகளின் பால் அவர்களுடைய அன்பு மிகப்பெரியதாக இருந்தபடியால் சேனைகளின் கர்த்தர் **பிதாவாகவும், அந்த வார்த்தை** சரீரப் பிரகாரமாக பிறந்தவராகி, தேவக் குமாரனாகவும், மனித குமாரனாகவும் மாறி, சரீரத்தில் நம்முடைய **சகோதரன்** ஆனார். ஏன்? நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்படி!

மனித மீட்புக்கான இந்த செயல்முறை, நித்தியத் தன்மை கொண்டு, தேவத்துவத்தில் என்றென்றும் சமத்துவமாக இருந்தவர்களிடையே எப்படிப்பட்ட ஆச்சரியமான ஓர் நிலையை ஏற்படுத்தி உள்ளது! இதன் மூலம் சேனைகளின் கர்த்தர், **பிதா** என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டார் – உச்சமானவர் – ஆயினும், ஒரு தகப்பனுக்குரிய எல்லாவிதமான தன்மைகளோடு அன்பு, தொடர் கரிசனை, இரக்கம் போன்றவை அப்படியே உள்ளது. **அந்த வார்த்தை**, பழைய ஏற்பாடு முழுவதிலும் சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தைகளைப் பேசின அவர் – தேவத்துவத்தின் தன் சமமான நிலையைத் துறந்தார். அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். [பிலி 2:6–8] . அவர் முதற்பேறான குமாரனாக பிதாவுக்குத் தம்மைத் தாமே கீழ்ப்படுத்தி, அவருக்காக ஆயத்தம் செய்யப்பட்ட மனித சரீரத்தில், மானிடருக்குச் சகோதரராக இருக்கும்படியாய், ஜீவனுள்ள **ஆத்துமா** வானார். அவருடனான சகோதரத்துவத்தின் காரணமாக, மனிதர்கள், பிதாவாகிய தேவனுடைய பிள்ளைகளாக இப்பொழுது ஆக முடிகிறது.

நம்முடைய பாவங்களுக்காகக் கர்த்தராகிய இயேசு சிலுவையில் மரித்ததற்குப் பிறகு, அவர் உயிரோடெழுந்து பரலோகம் ஏறிச் சென்றார். மீட்பின் திட்டத்தில் அவருடைய கீழ்ப்படிதல் மூலமாக, உண்டாக்கப்பட்டிருக்கிற எல்லாவற்றின் மீதும் கர்த்தத்துவம்

உடையவரானார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். ( பிலி 2:9–11 ). பிதாவாகிய தேவன் மாத்திரம் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கவில்லை. (1 கொரி 15:24– 28; வெளி 3:21 ; சங் 110:1 ). இந்த வேதப் பகுதிகள் பரலோகத்தின் இந்தக் காட்சியை விவரிக்கிறது. சர்வ வல்லவர் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார். நம்முடைய சகோதரராகிய இயேசு அவருடைய வலது பாரிசத்தில் இருக்கிறார். கிறிஸ்தவர்களாக நாம் அவர்களுக்கு முன்பாகக் குனிந்து தொழுதுகொள்ளும்படியாகவும், அவருக்கு ஊழியம் செய்யும்படியாகவும் போதிக்கப்பட்டிருக்கிறோம்.

ஆகையால், தேவத்துவத்துள், சாத்தியமான ஒரு **குடும்ப** உறவு முறை கீழ்ப்படிகிற மனிதர்களையும் சேர்ந்து மேம்படுத்தப்பட்டது. ‘‘**தகப்பன்**’’ ‘‘**மகன்**’’. ஆனால், பாவத்தினிமித்தம் இன்னும் செத்துப்போன நிலையிலிருக்கும் மனிதர்கள் மீது இந்த மாற்றம் எந்தவிதமான தாக்கத்தைக் கொண்டு வந்தது? மீட்பின் திட்டத்தில் பரிசுத்த ஆவியானவரின் பணி என்னவாக இருந்தது?

இயேசு தன் அப்போஸ்தலர்களிடம் தான் பிதாவினிடத்தில் திரும்பப் போன பின்பு பரிசுத்த ஆவியானவரை அனுப்புவேன் என்று சொன்னார். அதுபோலவே, அந்தப் பெந்தெகொஸ்தே நாளிலே அற்புதவிதமாகப் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார் என்பதை நாமறிவோம். அந்நாளில் யாரெல்லாம் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்கிறார்களோ அவர்கலெல்லாரும் **ஆவியினாலே பிறப்பார்கள்** என்று வாக்குக் கொடுக்கப்பட்டது. அப்படியானால், **ஆவியினால் பிறப்பது** என்றால் என்ன? பெந்தெகொஸ்தே நாளிலே, ஆவியினாலே ஏவப்பட்ட அப்போஸ்தலர்களால் இதற்கான பதில் கொடுக்கப்பட்டது. பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். (அப் 2:38). அந்த வகையாகக் கீழ்ப்படிந்த விசுவாசிகளின் செத்துப்போன ஆத்துமாக்கள் பரிசுத்த ஆவியானவரின் வரத்தை பெற்றுக் கொள்வதின் மூலமாக, ஜீவனைப் பெற்று, அதன் மூலம், பிதாவாகிய தேவனுடைய பிள்ளைகளாகி, இயேசுவாகிய தங்கள் சகோதரருக்கு சகோதர, சகோதரிகளாக மாறுகிறார்கள்.

இந்தவிதமாக, தேவத்துவத்துள் மூன்றாம் நபராக இருப்பவரின்

வல்லமையான கிரியை விவரிக்கப்பட்டுள்ளது. பாவத்திலிருந்து விலகி வரும் ஒவ்வொரு செத்துப்போன ஆத்துமாவும், ஞானஸ்நானத்தின் மூலம் இயேசுவின் இரத்தத்தைக் கொண்டு பாவத்திலிருந்து கழுவப்படும் ஒவ்வொரு ஆத்துமாவும் அதாவது, இயேசு கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டு – உயிரோடெழுந்தது போல தண்ணீரிலிருந்து வெளியே வருதல் – பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதின் மூலம் செத்துப்போன தன் ஆத்துமாவில் உயிர்பெற்ற ஜீவனைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்ட வேத வசனங்கள், நம்முடைய ஆத்துமாக்கள் ஆவியிலே ஜீவிக்கும்படியாய் எவ்விதம் செயல்படுகிறது என்பதை எழுதிக் கொடுக்கும்படியாக அதன் ஆசிரியர்களை வழிநடத்தியிருக்கிறது.

1. ஞானஸ்நானத்தில் நாம் ஆவியில் பிறக்கிறோம் ( யோவான் 3:3–5 )
2. அவர் நமக்கு உதவி செய்கிறவர் ( யோவான் 14:16–18)
3. அவர் நம்முடைய மீட்பின் முத்திரையாயிருக்கிறார் ( 2 கொரி 1:22 )
4. அவர் நம்முடைய அச்சாரமாய் இருக்கிறார் ( 2 கொரி 5:5 )
5. அவரை நாம் துக்கப்படுத்த வாய்ப்புண்டு (எபே 4:30)
6. அவரை நாம் அவித்துப்போட வாய்ப்புண்டு (1 தெச 5:19)
7. அவர் நம்மை நடத்துகிறார் ( கலா 5:18 )
8. அவருக்குள் நாம் பிழைக்கிறோம் ( 2 கொரி 3:6)
9. அவருக்குள் நாம் நடக்கிறோம் ( கலா 5:16)
10. அவர் மூலமாக நாம் ஆவியில் கனி கொடுக்கிறோம் (கலா 5:32)
11. அவர் மூலம் சரீரமாகிய சபைக்குள் நாம் பிரவேசிக்கிறோம் (1கொரி 12:13 )
12. அவர் நமக்குள் வாசம் செய்கிறார் (2 தீமோ 1:14 ; 1 கொரி 3:16,17)
13. அவர் நம்மில் நிலைத்திருக்கிறார் (1 யோவான் 4:13)
14. அவர் நம்மை பெலப்படுத்துகிறார் ( எபே 3:16–21 )
15. அவர் மூலமாக சரீரத்தின் கிரியைகளை நாம் அழித்துப் போடுகிறோம் ( ரோமர் 8:13)
16. அவர் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று சாட்சி பகர்கிறார் (ரோமர் 8:16)
17. அவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார் ( ரோமர் 8:27; எபே 2:18)
18. அவர் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார் ( ரோமர் 8:26)

19. அவர் நமக்குப் போதிக்கிறார் [ 1 கொரி 2:13 ]
20. அவர் நிதானித்து அறிகிறவராக இருக்கிறார் [ 1கொரி 2:14 ]
21. அவருக்குள் நாம் ஜெபிக்கிறோம் [யூதா 1:19,20]
22. அவர் ஜீவனைக் கொடுக்கிறார் [ யோவான் 6:63]
23. அவர் நமக்கு விடுதலைக் கொடுக்கிறார் [ 2 கொரி 3:17]
24. அவர், கிறிஸ்துவின் சாயலாகிய கண்ணாடியை உற்று நோக்கும் போது நம்மை மாற்றுகிறார் [2 கொரி 3:18]
25. அவர் மூலமாக ஜீவனை அறுவடை செய்கிறோம் [ கலா 6:8 ]
26. அவர் மூலமாய் பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியம் பெற்றுள்ளோம் [ எபே 2:18 ]
27. அவருடைய பெலத்தினாலே நாம் நம்பிக்கையில் கட்டப் பட்டுள்ளோம் [ ரோமர் 15:13]
28. அவராலே நாம் தேவனுடைய வாசஸ்தலமாகக் கூடிக்கட்டப்பட்டு வருகிறோம் [எபே 2:22]
29. அவர், சபையோடு சேர்ந்து **வா** என்று அழைக்கிறார் [வெளி22:17].

ஆக, நமக்குள்ளாக இருக்கும் பரிசுத்த ஆவியானவர், அற்புதமில்லாத முறையில், நம்முடைய ஆத்துமாக்கள் தேவனோடு மறுபடியும் வாழும்படி செய்கிறார். நம்முடைய நடத்தையினாலே **ஆவியை அவித்து போடுவோமானால்** [ 1 தெச 5:19], அவரிடமிருந்து விலகுவதோடு, முடிவிலே நாம் அவரைக் கட்டாயப்படுத்தி வெளியேறச் செய்து, அதன் மூலம் நம்முடைய ஆத்துமாக்கள் தேவனிடத்தில் மரித்ததாக மாறிப்போகும்.

இதிலிருந்து நாம் எதை இப்பொழுது புரிந்து கொள்கிறோம்? சேனைகளின் கர்த்தரோடு நமக்குத் தகப்பன் / பிள்ளை உறவு இருக்கிறது; வார்த்தையாகிய, தேவனுடைய குமாரரோடு ஒரு சகோதரருக்கும் / சகோதரருக்கும் உள்ள உறவு இருக்கிறது. இன்னும் பரிசுத்த ஆவியானவரோடு ஆவி /ஆத்துமா உறவு இருக்கிறது. ஒரு கட்டத்தில் மரித்துப் போயிருந்த நம் ஆத்துமாவில் அந்த ஆவியின் வாசம் செய்தது, நம்முடைய சரீரத்தில் புதிய ஆவிக்குரிய புதிய ஜீவனைக் கொண்டு வந்துள்ளது!

இதோ, மேலும் ஒரு கவனிக்கத்தக்க கருத்து: நம் தேவனுக்கும், நம் கர்த்தருக்குமான ஆராதனையில் நாம் குனிந்து பணிந்துகொள்ளும்படியாகப் போதிக்கப்பட்டுள்ளோம். பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்துள் **ஒருவர்** என்று நாம் புரிந்து வைத்திருந்தாலும், எந்த மனித உறவுக்கும் இணையாக அவர்

சித்தரிக்கப்படவில்லை. ( தகப்பன் – குமாரன் ). இன்னும் அவரைத் தொழுதுகொள்ளும்படியாக நாம் போதிக்கப்படவில்லை. இந்நிலைக்கு ஒருவேளை இது காரணமாக இருக்கலாமோ? அவர், நமக்குள்ளாக வாசம் செய்யும் **ஓர் ஆவியாக** சித்தரிக்கப்பட்டு நம்முடைய ஆத்துமாவை திரும்பவும் தேவனிடத்தில் வாழ்ந்திருக்கச் செய்வதால்!

இக்கருத்தை இந்துக்கள் இப்படியாக நம்புகிறார்கள். ஆவி என்பது மனித சரீரத்தில் உள்ள **ஒரு கடவுள்** என்றும், அது அவனை இருக்கிறதாகச் செய்கிறது என்றும், ஒரு நபர் **தெய்வீக நிலைக்கு** தன்னை **விழித்துக் கொள்ளச்** செய்து, அடுத்த நிலையை அடையும்போது அவன் வணங்குவதற்கு ஏற்றவனாகிறான் என்று. மனிதனுடைய தொழுகை முறையில், அவன் இப்படிப்பட்ட மகா பாவத்தைச் செய்து விடக்கூடாது என்பதற்காக, நமக்குள்ளாக வாசம் செய்யும் பரிசுத்த ஆவியை வணங்கக் கூடாது என்று கட்டளை பெற்றிருக்கக் கூடுமோ?

முடிவாக, என் மனதிலே ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு வட்டம் தெரிகிறது. உயிர்ப்பிக்கப்பட்ட என் ஆத்துமா, வாசம் செய்கிற ஆவியினாலே வாழும்படியாகச் செய்து, இயேசுவாகிய **என் சகோதரர்** மூலமாக, பிதாவாகிய தேவனிடத்தில் சேர்ந்து – அதன்மூலம் அந்த வட்டம் முழுமையடைய **அவர்கள்** முடிவில்லாத குடும்ப அன்பு, கரிசனைக்காக என்னிடத்தில் வந்து சேருகிறார்கள். ✝

## அந்த நாள்

| | | |
|---|---|---|
| **மகா நாள்....** | **–** | **யூதா:6** |
| **நியாயத்தீர்ப்பின் நாள்...** | **–** | **ரோமர்:2:16** |
| **கோபாக்கினையின் நாள்...** | **–** | **ரோமர்: 2:5** |
| **மகிமையின் நாள்...** | **–** | **பிலிப்:4:19** |
| **கர்த்தருடைய நாள்....** | **–** | **1தெச:5:2** |
| **கணக்கு ஒப்புவிக்கும் நாள்...** | **–** | **எபிரெயர் 4:13** |
| **ஆட்டுக்குட்டியின் கலியாண நாள்...** | **–** | **வெளிப்:19:7,9** |

வாலிபர் பகுதி

# தேவனுடைய சித்தம்

Dr. **ஏபில் நாயகம்**

**பி**ரியமான வாலிபர்களே, கடந்த மாதம் தேவனுடைய சித்தம் என்ன என்பதை அறிந்து கொள்வது எப்படி என்ற கருத்தின் அடிப்படையில் ரோமர் 12:1,2 ஆகிய வசனங்களை துணையாகக் கொண்டு நாம் தியானித்து வந்தோம். முதலில் இரண்டாம் வசனத்தையும், பின்பு முதலாம் வசனத்தையும் நாம் கவனித்து வசனம் என்ன சொல்கிறது என்பதை பார்த்தோம். அதனடிப்படையில், இரண்டாம் வசனத்தில் இருக்கும் பகுத்தறிதல் என்றால் என்ன என்றும், உலகத்துக்கு ஒத்த வேஷம் என்றால் என்ன என்பதையும் தேவனுடைய சித்தம் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதையும், மனம் புதிதாதல் என்றால் என்ன என்பதையும் நாம் கவனித்தோம். இந்த மாதம் முதலாம் வசனத்தை கவனிக்கலாம்.

ரோமர் 12:1 – அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. இங்கே அப்போஸ்தலனாகிய பவுல், அப்படியிருக்க என்றும் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றும் சொல்லுவதை வாசிக்க முடியும். அப்படி என்று சொன்னால் இப்பொழுது சொல்லப்படும் காரியங்களுக்கும் ஏற்கனவே சொன்ன காரியங்களுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்த பவுல் முற்படுகிறார். பவுலடியாரின் நிருபங்கள் பொதுவாகவே உபதேசங்களையும், அதைத்தொடர்ந்து அந்த உபதேசத்தை எப்படி வாழ்க்கையில் செயல்படுத்த வேண்டும் என்பதையும் உள்ளடக்கியிருக்கும். ரோமர் 12 ஆம் அதிகாரம் அதைப்போலத்தான். கிறிஸ்தவ வாழ்க்கை எப்படி ஆக இருக்க வேண்டும் என்று இந்த அதிகாரத்தில் நடைமுறை காரியங்கள் சொல்லப்பட்டிருப்பதை நாம் கவனிக்கிறோம்.

''உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று' – வாலிபர்கள் ஆகிய நாம், கவனிக்கவேண்டிய பகுதி இதுவே. தேவனுக்கு ஒப்புக்கொடுத்தல் என்பது வாலிப் பிராயத்திலே நாம் செய்யவேண்டிய மிக முக்கியமான ஒரு காரியம். தேவன் அனுதினம் நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கிறார். தேவனுடைய இரக்கம், அன்பு, தயவு என்பவைகளால், நாம் நடத்தப்பட்டு வருகிறோம்.

ஒப்பு கொடுக்கவேண்டும் என்று சொல்லும்பொழுது, தேவனுடைய இரக்கங்கள் நிமித்தம் நாம் அப்படிச் செய்ய வேண்டும் என்று கூறுகிறார். தேவனுடைய இரக்கம் நமக்கு பல நன்மைகளை கொடுத்திருக்கிறது. மிக முக்கியமாக அவருடைய ஒரேபேறான குமாரனை நமக்காக அவர் கொடுத்ததின் மூலம் அவருடைய அன்பையும், அளவில்லாத இரக்கத்தையும் அவர் காட்டி இருக்கிறார். இதை அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதற்கான காரணம், ஒருவரிடத்தில் ஒப்புக் கொடுங்கள் என்று சொல்லும்பொழுது, நான் ஏன் ஒப்புக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு கேள்வி வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. வாலிபர்களே, பலர் இன்றைக்கு இந்த கேள்வியை கேட்கிறார்கள். தேவன் யார் என்றும், அவர் எனக்கு என்ன செய்தார் என்றும், அவருக்கு என்னுடைய வாழ்க்கையை ஏன் ஒப்புக்கொடுக்க வேண்டுமென்றும் கேட்கிறார்கள். இப்படி கேள்வி கேட்பவர்களுக்கு, பவுல் சரியான பதிலை கொடுத்திருக்கிறார். ''தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்'' என்று. தேவனுடைய அன்பை ருசி பார்த்தவர்கள் தங்களை தேவனுக்கென்று ஒப்புக்கொடுக்க கடமைப்பட்டிருக்கிறார்கள் என்ற பொருளோடு இதைச் சொல்கிறார்.

சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக – சரீரங்களை ஜீவபலியாக என்பதை நாம் கவனமாகப் படிக்க வேண்டும். ஜீவ பலி என்பது சரீரம் எங்கிருந்தாலும், யாருடன் இருந்தாலும் அது ஜீவ பலியாக இருக்க வேண்டும். நம்முடைய விருப்பங்களையும் ஆசைகளையும் முன்வைக்காமல் தேவனுக்காக சுத்தமான நீதியான வாழ்வை வாழ்வது புத்தியுள்ள ஆராதனை என்று இங்கே பவுல் கூறுகிறார். ஜீவபலியாக என்று சொல்லும்பொழுது வாரம் ஒருமுறையோ அல்லது மாதம் ஒரு முறையோ கிறிஸ்தவராக வாழ்வது அல்ல. நண்பர்களோடு இருந்தாலும், உறவுகளோடு இருந்தாலும், தனிமையில் இருந்தாலும், எந்த நிலைமையிலும் நம்முடைய சரீரம் ஜீவபலியாக ஒப்பு கொடுக்கப்பட வேண்டும். கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்''–. என்று 1 கொரிந்தியர் 6:20 இல் வாசிக்கிறோம். நமது சரீரத்தை ஜீவ பலியாக அனுதினம் கொடுத்து தேவனை மகிமைப்படுத்துவது நம்முடைய கடமையாகும். அப்படி செய்வது புத்தியுள்ள காரியம் என்று பவுல் கூறுகிறார். அதனுடைய அர்த்தம், அப்படி நாம் செய்யத் தவறினால் நாம் தவறு செய்கிறோம் என்று பொருள்.

வாலிபர்களே, தேவனுடைய சித்தம் என்ன என்பதை இந்த இரண்டு வசனங்கள் மூலமாக நாம் தெரிந்து கொண்டோம். தேவனுடைய சித்தத்தை நாம் பகுத்தறிய வேண்டும். இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் கூடாது. உலகத்தால் கறைபடாமல் நாம் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய சரீரங்களை சுத்தமான கறைபடாத ஜீவபலியாக அனுதினம் ஒப்புக் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட வாழ்வை நாம் வாழ்வதே நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தமாக இருக்கிறது. இப்படிச் செய்வது புத்தியுள்ள ஒரு முடிவு. நாம் ஏன் இதை செய்ய வேண்டும் என்று கேள்வி வருமாயின், அதற்கான பதில், நாம் அவருடைய அன்பை ருசித்து இருக்கிறோம். எனவே, அவர்களுடைய இரக்கங்களை முன்னிட்டு நாம் இந்த முடிவை எடுக்க வேண்டும். இதுவே நம் வாழ்க்கையில் தேவனுடைய சித்தம். பிரியமானவர்களே, அவருடைய சித்தத்தை நிறைவேற்றுகிற ஒரு வாழ்க்கையை நாம் வாழ தேவனுக்கு நம்மை ஒப்புக் கொடுப்போம்! ஆமென்!!

✝

## உண்மையுள்ள ஊழியன்

| | | |
|---|---|---|
| 1.ஆபிரகாம் இருதயத்திலே உண்மை. | - | நெகேமியா 9:7.8 |
| 2. மோசே எங்கும் உண்மை. | - | எபிரேயர்3:5 |
| 3. தாவீது நீதி செய்வதில் உண்மை. | - | 1சாமுவேல் 26: 23 |
| 4. எலியா வார்த்தையிலே உண்மை | - | 1இராஜாக்கள் 17:24 |
| 5. எசேக்கியா செயலிலே உண்மை. | - | 2 நாளாகமம் 31:20 |
| 6. தானியேல் வேலையிலே உண்மை. | - | தானியேல் 6:4 |
| 7 சில்வானு பொறுப்பிலே உண்மை | - | 1 பேதுரு 5:12 |

சிறுவர் பகுதி

# தேவனிடத்தில் அன்புகூருவது

Dr. பிரெய்ஸி

**ஹ**லோ, குழந்தைகளே நீங்கள் அனைவரும் நலமாக இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். இந்த மாதம் நாம் தேவனிடத்தில் எப்படி அன்புகூர வேண்டும் என்று பார்ப்போம்

லூக்கா 10:27,உபா 6:5 வசனங்கள் நமக்குத் தெரியும் –உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன்முழு ஆத்துமாவோடும், உன் முழுப்பலத்தோடும் முழுச்சிந்தையோடும் அன்புகூர் .1 யோவான் 5:3 ல், நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம் என்று பார்க்கிறோம். நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் என்று யோவான் 14:15ல் இருந்து நாம் அறிவோம்.

ஆகையால், சிறிய குழந்தைகள் அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் தேவனிடத்தில் அன்பு கூரவேண்டும்.

அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான் 1 யோவான் 4 ல் இருந்து நாம் அதை அறிவோம். அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக்கிறார். தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்.

எனவே, குழந்தைகளே நம்மைப் போலவே பிறரிடத்திலும் அன்புகூர வேண்டும். தேவனை உத்தமமாய் பின்பற்றி அன்பைப் பரப்புவோம். உங்கள் ஒளியைப் பிரகாசிக்கச் செய்வதன் மூலம் தேவனை மகிமைப்படுத்துங்கள்

அன்புடன்,
ப்ரைஸி அக்கா

✝

**கேள்விகள் :**

1. நாம் தேவனிடத்தில் எப்படி அன்பு கூர வேண்டும்?

2. நாம் மற்றவர்களிடத்தில் எப்படி அன்பு கூர வேண்டும்?

3. தேவன் நம்மிடத்தில் எப்படி அன்பு கூர்ந்தார்?

4. தேவன் எப்படி நம்மிடத்தில் நிலைத்திருக்கிறார்?

5. நாம் தேவனுடைய அன்பை மற்றவர்களிடத்தில் எப்படி காண்பிக்க முடியும்?

✝

## நாளும் நடப்பும்

1. உயர்சாதி ஏழைகளுக்கான 10% இட ஒதுக்கீடு செல்லும் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பு பலரிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

2. தமிழகமெங்கும் பெய்து வரும் கனமழை விவசாயிகளுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

3. உக்ரைன் – ரஷ்யா இடையே நடந்து வரும் போர் உலக முழுவதிலும் உணவு பஞ்சத்தையும், விலைவாசியையும் உயர்த்தியிருக்கிறது.

4. குஜராத்தில் தொங்கு பாலம் இடிந்து விழுந்ததில் 130 பேர் உயிரிழப்பு.

5. டி–20 உலக கோப்பையை இங்கிலாந்து அணி கைப்பற்றியது.

# கர்த்தரை நாம் எப்படி சேவிக்கிறோம்?

Bro. பாண்டியன்

**ஜீ**வனுள்ள தேவனைச் சேவித்து வருகிற உங்களுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள் உண்டாவதாக. இஸ்ரவேலர் தங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த தேவனை மறந்து அந்நிய தெய்வங்களை நாடியபோது யோசுவா கடிந்து கொண்டார். மேலும், நானும் என் வீட்டாருமோ கர்த்தரையே சேவிக்கத் தீர்மானிக்கிறோம் என அறிக்கையிட்டார். இரட்சிக்கப்பட்டு சபையில் இருக்கிற நாம் அனைவரும் அந்த தேவனையே சேவித்து வருகிறோம். ஆனால், எப்படி சேவிக்கிறோம் என்பதையும் விசேஷமாக தேவனுடைய ஆலோசனையின்படி சேவிக்கிறோமா என்பதே நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டிய ஒன்று.சங் 2:11ல் பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள் நடுக்கத்துடனே, களிகூருங்கள் என்கிறான் சங்கீதக்காரன். அதைப் பற்றிச் சற்று பார்ப்போம்.

பொதுவான அர்த்தமாக சேவித்தல் என்ற வார்த்தைக்கு, பணிந்து கொள்ளுதல், தொழுகை, ஆராதனை மற்றும் அவர் சொற்படி எல்லாம் கேட்டு நடப்பது போன்றவைகளைச் சொல்லலாம். ஏன் சேவிக்க வேண்டும் என்று கேட்டால், தேவன் நம் சிருஷ்டிகர், அற்புதவிதமாக இந்த உலகத்தையும் அதில் உள்ள யாவற்றையும் போஷித்து வருகிறவர். மேலும், நமக்குத் தனிப்பட்ட முறையில் சுகம், பெலன், ஜீவன் தந்து சோர்வு பெலவீனங்களில் தாங்கி ஆறுதல் செய்து நம் தேவைகளை எல்லாம் **அற்புதவிதமாய்** சந்திக்கிற ஜீவனுள்ள தேவனாய் அவர் இருக்கிறபடியால் நாம் அனைவரும் அவரைச் சேவிக்கக் கடனாளிகளாய் இருக்கிறோம்.

இயல்பாக மனிதரிடம் இருந்து நன்றியுணர்வை தேவன் எதிர்பார்க்கிறார். அது வெறுமனே அல்ல. அவர்கள் எல்லாத் தேவைகளையும் அறிந்து அவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடுச் செய்த பின்னரே தேவன் அதை நம்மிடம் எதிர்பார்க்கிறார் என்றால் அது மிகையாகாது. அதனால் தான். உரிமையோடே முழுமனதோடே அவரிடம் அன்புகூர வேண்டும் என்றும், என் ஜனங்கள் எனக்கு ஆராதனை செய்யும்படி அனுப்பிவிடு என பார்வோனிடமும் சொல்லச் சொன்னார். இப்போதுள்ள நம்மையும் அவர் இருளின் அதிகாரத்தில் இருந்து விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய ராஜ்ஜியத்திற்குள் சேர்த்துக்கொண்டபடியால் பிதாவாகிய அவரை நாம் ஸ்தோத்தரிக்கின்றோம் ( கொலே1:3).

நன்மை செய்து தேவனை நன்றியோடு சேவிக்க வேண்டிய இஸ்ரவேலர் அதை மறந்தபோது மாடு தன் எஜமானையும், கழுதைத் தன் முன்னனையையும் அறியும், இஸ்ரவேலரோ அறிவில்லாமலும் என் ஜனம் உணர்வில்லாமலும் (ஏசா 1:3) இருக்கிறது என வருத்தப்பட்டார். மேலும், குமாரன் தன் பிதாவையும், ஊழியக்காரன் தன் எஜமானையும் கனம் பண்ணுகிறார்கள். நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமான் ஆனால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார் என மல்கியா 1:6ல் பார்க்கிறோம். எனவே, நாம் அவரைப் பற்றிய மரியாதையும், பயமும் உள்ளத்தில் வைத்து அவரைத் தொழுது கொள்ள வேண்டும்.

பிதாக்களின் காலத்தில் விருத்தசேதனமும், மோசேயின் காலத்தில் பலிகளும் கட்டளையிடப்பட்டது. இது மனுஷனுக்கு தேவனோடே உள்ள உறவை வலியுறுத்தவும் முக்கியத்துவத்தை உணரவும் மாம்சத்தின் **பலிகள்** அடையாளப்படுத்தப்பட்டது. அதனால், தான் தினந்தோறும் காலை, மாலை, சுத்தமான மிருகங்கள். பழுதற்றது போன்ற அநேகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது (யாத்29:38). இவை சரீர சுத்திகரிப்பு சம்பந்தப்பட்டது என்கிறது புதிய ஏற்பாடு (எபி9:13), இப்போது நாம் ஆவிக்குரிய ஆராதனையை ஏறெடுக்கிறோம். அவர்கள் தவறியபோது தண்டிக்கப்பட்டனர். உதாரணத்திற்கு, ஆரோனின் குமாரர் நாதாபு அபியு, ஏலியின் குமாரர் ஓப்னி, பினேகாஸ் மற்றும் உசியா ராஜா போன்றவர்கள் ஆராதனை முறைமைகளை மதிக்காமல் அசட்டை செய்த போது கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள் என்பது வரலாறு!

இவையெல்லாம் நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டுள்ளது (1கொரி10:11) ஆராதனை நேரம் என்று ஒவ்வொரு சபையாருக்கும் அறிவிக்கப்பட்டு கூடி வருகிற நாம் சரியான நேரத்தில் கூடுகிறோமா? என்பதைச் சிந்தித்து செயல்பட வேண்டும். பள்ளிக் கல்லூரிகள், வேலை செய்யும் இடங்களுக்கு சரியான நேரத்திற்கு செல்லும் மக்கள் மத்தியில் நீங்கள் ஆராதனைக்கு முன்கூட்டியே ஏன் செல்லக்கூடாது? அவர்கள் அஞ்ஞானிகள், நீங்கள் ஞானிகள் அல்லவா? அப்படி ஒருவர் சரியான நேரத்தைக் கடைப்பிடிக்கும் போது அவர் தேவனைக் கனம் பண்ணுகிறார் என்பதைக் கவனத்தில் கொள்வோம். பிறர் தாமதம் பற்றி நாம் கோபப்படாமல் அவனவனுக்குரிய பலனைக் கர்த்தர் கொடுப்பார் என நாம் சாந்தமாய் இருப்போமாக (வெளி22:12).

தேவனுக்குப் பிரியமானவன் என பெயர் பெற்ற தாவீது சொல்வதைக் கவனியுங்கள். தேவனே என்னை ஆராய்ந்து என் இருதயத்தை; சிந்தனைகளை அறிந்து கொள்ளுங்கள். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து வழி நடத்தும்(சங்139:23,24). இதையே அப்போஸ்தலர் உபதேசத்தில், எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தை புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்(1கொரி11:28) என்பதை நாம் வாரந்தோறும் கேட்டு கர்த்தர் பந்தி எடுக்கிறோம். மற்றவரின் குறைகளை அல்ல நம்முடைய குறைகளை ஆராய வேண்டும். திருத்திக்கொள்ளப் பிரயாசப்பட வேண்டும் நம்டைய இருதயமே நம்மைக் குற்றவாளியாகத் தீர்க்காதபடிக்கு யோவான்3:20) எச்சரிப்பைப் பெறுவதே (I கர்த்தருடைய பந்தி ஆகும். ஆகவே, நம்முடைய விசுவாசம், பரிசுத்தம், தாழ்மை, சகோதர ஐக்கியம். வசனத்தைக் கைக்கொள்வது போன்ற காரியங்களில் நம்மைச் சீர்ப்படுத்துவதே சபைகூடுதலின் முக்கிய நோக்கமாகும்.

சபை கூடுதலை நாம் அசட்டை செய்தால் கொடிதான ஆக்கினை அடைவான் என்கிறார் எபிரேய ஆசிரியர் (எபி10:29). ஆகவே, எனக்கன்பான சகோதர, சகோதரிகளே சபை கூடுதலும், பரிசுத்தமாகுதலும், ஐக்கியமும் நமக்குக் கிடைத்திருக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதம் என்பதை நாம் உணர்ந்து இயேசு ஆண்டவர் சொன்னதைப்போல ராயனுடையதை ராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் செலுத்தத் தீர்மானம் செய்வோம். ஏனெனில், தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறார். ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம், பயத்தோடும், பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்வோம் (எபி12:28,29) கிருபையானது உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக, ஆமென்.

✝

---

## தேவன் ஐசுவர்யமுள்ளவர்

| | |
|---|---|
| **இரக்கத்தில்...** | **எபேசியர்: 2:4** |
| **கிருபையில்....** | **எபேசியர்: 1:7** |
| **தயவில்... நீடிய சாந்தத்தில்... பொறுமையில்...** | **எபேசியர்: 214** |
| **மகிமையில்......** | **எபேசியர்: 3:19** |

## சரியான மனிதன் செய்த சரியற்ற செயல்கள்

சகோ.K.M.பிலிப். பவானி

**தே**வனையும், கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் பெருகக்கடவது. தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாயிருக்கிற தேவன் சர்வத்தையும் ஞானமாய் படைத்தார் [ரோமர்16:27]. பொதுவாக படைக்கப்பட்ட அனைத்தும் இந்நாள் வரை தான் படைக்கப்பட்ட நோக்கத்தை சரியாய் செய்து வருகின்றன. செம்மையானதை [சரியானதை] மட்டும் செய்ய வேண்டும் என்று படைக்கப்பட்ட மனிதனோ சரியற்ற செயல்களை செய்து வருகிறான். மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங் கொண்டிருக்கிறது[பிர 8:11], கர்த்தருடைய சமூகத்தில் பொல்லாப்புச் செய்த அந்த இஸ்ரவேல் சந்ததியெல்லாம் நிர்மூலமாகுமட்டும் அவர்களை வனாந்தரத்திலே 40 வருடங்கள் அலையப் பண்ணினார் என்பதை நாம் மறந்து விடக்கூடாது[எண் 32:13]. பொதுவாக, மனிதன் தவறு செய்கிறான். ஆனால், தேவனால் சரியானதை மட்டும் செய்யும்படியாய் அழைக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்ட சரியான மனிதன் சரியற்ற செயல்களைச் செய்வதென்பது அவனது சமாதானத்தை, சந்தோஷத்தை இழக்கச்செய்யும், சாபத்தை கொடுக்கும் என்பதைத்தான் சரியான மனிதன் யோனா செய்த சரியற்ற செயல்களின் விளைவுகளை அறிந்து, உணர்ந்து கற்றுக் கொள்வோம்.

யோனா வாழ்ந்த நாட்களில் மகா நகரமாகிய நினிவே பட்டணத்து மக்களின் அக்கிரமம் தேவ சமூகத்திற்கு எட்டியதால், தேவன் அவர்களை எச்சரிக்கும்படியாய் அவர்களுக்கு விரோதமாய் பிரசங்கிக்க யோனாவைத் தெரிந்து கொண்டு, நினிவேவுக்குப் போகக் கட்டளையிட்டார். யோனாவின் பிரசங்கத்தின்மூலம் நினிவே பட்டணத்தார் மனந்திரும்ப தேவன் ஒரு வாய்ப்பைக் கொடுத்தார். ஆம் நாம் ஆராதிக்கும் தேவன், ''இரக்கமும், மன உருக்கமும் நீடியசாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமானவர் என்பதை நாம் புரிந்து கொள்வோம்[யோனா 4:2]. இதை மன அளவில் அறிந்திருந்த யோனா, மூன்றே நாள் பயணத்தில் இலட்ச்சத்து இருபதினாயிரத்திற்கும் மேலான மக்கள் மீட்கப்படுகிற இரட்சிக்கப்படுகிற மாபெரும் பொறுப்பு, பாக்கியம் தன் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை சற்றும் உணராதவனாக, பொறுப் பற்றவனாக செய்த சரியற்ற செயல்கள், அவன் வாழ்வில் மகிழ்ச்சிக்குப் பதிலாக மனமடிவையும் சமாதானத்திற்கு பதிலாகசஞ்சலத்தையும், போராட்டங்களையும், பயம்,

கலக்கத்தையுமே ஏற்படுத்தியது. இவனுடைய மீறுதலினால் அவனைச் சார்ந்தவர்களுக்கும் பயத்தையும், கலக்கத்தையும் நஷ்டத்தையும் உருவாக்கினான். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட அன்பானவர்களே! நம் ஒவ்வொருவருக்கும் தேவன் கொடுத்திருக்கும் பொறுப்புகளை தயவுசெய்து கவனியுங்கள். சுவிசேஷத்தை பிரசங்கிப்பது நம்மேல் விழுந்த கடமையாகும்(1 கொரி 9:16) நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களின் மீட்பு, இரட்சிப்பு நம்பிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. சபையாக ஊழியரோடு இணைந்து சரியான செயல்களை செய்வோம். இதைச் செய்வதில் எஸ்தர் ராணி போல் **செத்தாலும் சாகிறேன்** என்ற உறுதியோடு(எஸ்தர் 4:16) செயல்படுவோம். எஸ்தரின் உறுதி அவளை மட்டுமல்ல யூத இனத்தையே மீட்டெடுத்தது. ''நீங்களோ, உங்களை அந்த காரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்''(1பேதுரு 2:9) என்பதை செயல்படுத்துவோம்.

**இங்கு சரியானவன் செய்த சரியற்ற முதல் செயல்:**

கர்த்தருடைய சமூகத்தை விட்டு விலகினான் (யோனா 1:3). தேவன் யோனாவை நினிவேவுக்குப் போகச்சொன்னார். ஆனால், யோனாவோ கர்த்தருடைய சமூகத்தை விட்டு விலகி தர்சீசுக்குப் போகும்படி கப்பலில் ஏறினான். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன் தேவ சமூகத்தை விட்டு விலகுவதென்பது பெரிய துணிகரமானதும், கடினமானதும், பரிதாபத்திற்குரியதுமாகும். ''உமது வேதத்தை விட்டு விலகுகிற துன்மார்க்கர் நிமித்தம் நடுக்கம் என்னைப் பிடித்தது (சங்119:53) என்பதே உண்மையாகும். கர்த்தரை விட்டு விலகுகிறவர்கள் நிர்மூலமாவார்கள்'', என்பதே சாபமாகும் (ஏசா 1:28) இயேசுவின் உவமையில் தகப்பனை விட்டு விலகி தூரமாய் போன இளைய மகன் எல்லாவற்றையும் இழந்தவனாய், அவமானமும், துக்கமும் நிறைந்தவனாய் காணப்பட்டான். அன்பானவர்களே! நாம் எப்பொழுதும் தேவ சமூகத்தில் இருக்கும்படியாய் அழைக்கப்பட்டிருக்கிறோம். அழைப்பிற்கு அப்படியே கீழ்படிவோம்.'' அவருடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்த மும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு(சங் 16:11) என்பதை அனுபவிப்போம். நாம் எப்பொழுதும் தேவ சமூகத்தில் காணப்படும்படி வாரத்தின் முதல் நாளிலே சபை கூடுதலை விட்டு விடாமல் இருப்போம். வேத வாசிப்பு, தியானம், ஜெபம், குடும்ப ஜெபத்தில் தேவ சமூகத்தில் நெருங்கி ஜீவிப்போம். அவரது சமூகம் நமக்கு முன்பாகச் சென்று நமக்கு இளைப்பாறுதல் கொடுக்கும்(யாத் 33:14).

**சரியானவன் செய்த சரியற்ற 2–வது செயல்:**

யோனா கர்த்தருடைய சமூகத்தினின்று விலகும்படி கூலி கொடுத்தான். யோனாவின் சரித்திரத்தை கவனித்தால் தொடர்ந்து அவன் செய்த பல சரியற்ற செயல்களுக்கு, தேவ சமூகத்தை விட்டு விலகியதே அடிப்படை காரணமாகும். தேவ சமூகத்தை விட்டு விலகும் மாபெரும் பாவத்தை கூலி கொடுத்து வாங்கினான். கெட்டுப் போகிறேன் – எவ்வளவு பந்தயம் என்று கேட்கும் மூடத்தனத்தை இதில் பார்க்கிறோம். ''கர்த்தாவே உமது கிரியைகள்... யோசனைகள் மகா ஆழமானவை என்பதை மூடன் அறியான்(சங் 92:5,6), இன்றும் பரிசுத்தமாக்கப்பட்ட சிலர் கூலி கொடுத்து பாவத்தை (மதுபானம், போதைப்பொருள், விபச்சாரம்) வாங்கி தன் பரிசுத்தத்தை இழந்து நிற்கிறார்கள்.'' நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கடினமாய் செவிகொடுத்து நலமானதைச் சாப்பிடுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும்''(ஏசா 55:2). கூலி கொடுத்து கப்பல் ஏறினவன் கடலில் தூக்கி எறியப்பட்டான் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

**சரியானவன் செய்த சரியற்ற 3வது செயல்:**

சரியான இடத்தை விட்டு விலகி தவறான இடத்தை தெரிந்து கொண்டான். தேவ கட்டளையை அசட்டை செய்து நினிவேவுக்குப் போகாமல் எதிர்திசையில் தர்சீசுக்குப் போகக் கப்பல் ஏறினான். கர்த்தரை விட்டு விலகுவதில், விலகிய இடத்திலேயே இருந்தால் மீண்டும் ஒப்புரவாக அநேக வாய்ப்புகளுண்டு. பேதுரு இயேசுவை மூன்று முறை மறுதலித்த சம்பவத்தில் பேதுரு, இயேசு தன்னை திருப்பிப் பார்க்கும் தூரத்தில் இருந்ததால்தான், தன் தவறை உணர்ந்து மனங்கசந்து அழுது மீண்டும் இயேசுவோடு ஒப்புரவாக முடிந்தது. ஒருவேளை யூதாசைப் போல வெகுதூரம் சென்றிருந்தால் மனஸ்தாபப்பட்டும் மனந்திரும்ப இயலாமல் உயிரை மாய்த்துக் கொண்டிருப்பான். யோனாவும் கூட நினிவேவுக்கு அருகிலேயே இருந்திருந்தால் கடலுக்குள் ஏறியப்படவும், மீனின் வயிற்றுக்குள் சென்று புலம்பவும் அவசியம் ஏற்பட்டிருக்காது. தேவன் நம்மைக் குறித்து ''நீதியை அறிந்தவர்களே! என் வேதத்தை இருதயத்தில் பதித்திருக்கிற ஜனங்களே, எனக்குச் செவி கொடுங்கள். மனுஷரின் நிந்தனைக்குப் பயப்படாமலும், அவர்கள் தூஷணங்களால் கலங்காமலும் இருங்கள். எழும்பு எழும்பு பெலன் கொள்'' என்று தேற்றுகிறார்(ஏசா 51:7,9).

**சரியானவன் செய்த சரியற்ற 4வது செயல்:**

விழித்திருந்து ஓடி ஓடி சேவை செய்ய வேண்டிய யோனா கப்பலில் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தான். இது ஊழியப் பாதையில் அவனது நீர்விசாரத்தை காட்டுகிறது. மட்டுமல்ல தேவ சமூகத்தை விட்டு விலகும் மனிதனிடத்தில் தேவ பண்பாகிய அன்பு, இரக்கம், கருணை, மன உறுக்கம் தேவனை விட்டு விலகிப் போய் விடுகிறது. மாறாக அசட்டை அக்கறையின்மை அஜாக்கிரதை சுயநலம் அவனை ஆட்கொண்டு விடுகிறது மூடரின் நிர்விஷாரம் அவனை அழிக்கும்[நீதி 1:32] என்ற உணர்வற்றவனாய் போய்விடுகிறார் இங்கே யோனாவை நிமித்தம் தர்ஷிசுக்கு செல்லும் கப்பளை நோக்கி கர்த்தர் சமுத்திரத்தின் மேல் பெருங்காற்றை வரவிட்டார். அமைதியாய், நம்பிக்கையோடு பயணம் செய்தவர்கள் பயந்து, கலங்கி, பொருள்களை இழந்து வேதனையோடு காணப்பட்டார்கள். இதைத்தான், 'பாவியான ஒருவன் மிகுந்த நன்மையைக் கொடுப்பான் என்று ஞானி சரியாய் சொல்கிறார்[பிர 9:18], இக்கொடிய சூழ்நிலையில் தேவ மனிதன் யோனா நித்திரை விட்டு எழுந்து, முழங்காலிட்டு தேவனை நோக்கி ஜெபித்து, எல்லோருக்கும் நம்பிக்கையையும், சமாதானத்தையும் உருவாக்கியிருக்கலாம். ஆனால், சிறிதும் மனித நேயமற்ற மனிதனாக அயர்ந்து நித்திரை செய்ததால் அவன் கடலிலே தூக்கி எறியப்பட்டான். அன்பானவர்களே! ஆவிக்குரிய வாழ்க்கையில் தூக்கம் என்பது ஆசீர்வாதங்களை இழக்கச்செய்யும்; நம் வாழ்க்கையிலும், குடும்பங்களிலும் பயத்தையும், நஷ்டத்தையும் உருவாக்கும். தேவ பிள்ளைகளே விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன் கொள்ளுங்கள் [1 கொரி16:13], அப்பொழுது கிறிஸ்து நம்மை பிரகாசிப்பிப்பார் [எபே5:14].

**சரியானவன் செய்த சரியற்ற 5வது செயல்:**

உண்மையில்லாதவனாய் காணப்பட்டான். பெரும் போராட்டங்களின் மத்தியில் கப்பலில் இருந்தவர்கள் தூங்கிக் கொண்டிருந்த யோனாவை எழுப்பி விசாரிக்கையில், அவன் நான் எபிரேயன்; சர்வத்தையும் படைத்த தேவனிடத்தில் பயபக்தி உள்ளவன்'' என்று துணிகரமாய் போய் பேசுகிறான். தன்னோடு இருப்பவர்களின் நிலை குறித்து இரக்கமற்றவனாய், மன உருக்கமில்லாதவனாய் தூங்கினவன், தான் கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவன்'' என்று சொல்வது மிகப்பெரிய மாய்மாலம். தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நினிவேவுக்குப் போகாமல் எதிராக பயணம்

செய்பவன்; இலட்சத்து இருபதினாயிரம் மக்களின் அழிவைக்குறித்து சிறிதும் அக்கறையற்றவன் தன்னை பயபக்தியுள்ளவன் என்று சொல்வது மிகப்பெரிய துணிகரம். இன்றும் கிறிஸ்தவர்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு வேதத்திற்கு எதிரான காரியங்களை செய்துகொண்டு தங்களை பக்தியுள்ளவர்கள் என்று சொல்வது மிகப்பெரிய ஏமாற்று வேலையாகும். உண்மையான பக்தி குறித்து இயேசு சொல்வதை கவனியுங்கள். நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே எனக்கு சீஷர்களாயிருப்பீர்கள் என் கற்பனைகளை பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்கிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்''(யோ 8:31-14:21). கிறிஸ்தவம் வெறும் பேச்சில் அல்ல செயலில் பிரதிபலிக்க வேண்டும்.

**சரியானவன் செய்த சரியற்ற 6 வது செயல்:**

என்னை சமுத்திரத்திலே போட்டு விடுங்கள் என்று யோனா சொன்னான். தான் தேவனுக்கு விரோதமாய் செய்த பாவங்களை, மீறுதல்களைக் குறித்து மனம் வருந்தி, திருந்தி தேவனிடம் ஒப்புரவாகாமல் தன் மரணத்தைக் குறித்து தவறான முடிவை எடுக்கிறான். அன்பானவர்களே! ஒருமுறை பாவத்திலிருந்து விடுதலை பெற்ற நாம், தேவ இரக்கத்தை உணராமல் அசட்டை செய்வோமானால் தேவ கிருபையை இழந்து விடுவோம்.

சத்திரத்தில் தூக்கி எறியப்பட்ட யோனா நாற்றம் எடுக்கும் மீனின் வயிற்றில் மூன்று நாள் உயிரோடிருந்தான் என்றால் அது எத்தகைய கொடுமையானது என்பதை அனுபவித்த யோனா கூறுவதை கவனியுங்கள்: ''என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன். நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன்' என்று கதறினான் (யோனா 2:2). இரக்கமுள்ள தேவன் மீனின் வயிற்றிலிருந்து யோனாவை விடுவித்து நினிவேவுக்கு அனுப்பினார். மூன்று நாள் பயணத்தை தேவன் ஒரே நாளில் முடித்து வைத்தார். யோனா மூலம் எச்சரிப்பை கேட்ட இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு மேலான மக்கள் கேட்டு மனந்திரும்பி தேவனுக்கு கீழ்ப்படிந்து அழிவினின்று இரட்சிக்கப்பட்டார்கள். அன்பான தேவ மக்களே! மனந்திரும்புகிற ஒரு பாவியின்னிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகுமென்றால் இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கும் அதிகமான பேரின் மனந்திரும்புதல் தேவ சமூகத்தில் எத்தகைய சந்தோஷத்தை உருவாக்கியிருக்கும்!! ஆம் சரியான மனிதன் செய்த சரியான செயலை நாம் செய்வோம். தேவனைப் பிரியப்படுத்துவோம். ஆமென்!!

✝

# கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள் "இசைக்கருவிகள்"

சகோ.ஜே.ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார், சென்னை.

**முன்னுரை:**

1. இசைக்கருவிகளைப் பயன்படுத்துவது எப்போதும் இருந்தது என்பதைப்போல் தெரிகிறது. ஏறக்குறைய எல்லா சபைகளும் அதைப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, அவைகளை எப்படி சந்தேமெ முடியும்? இது அநேகரின் கேள்வி. இயேசுகிறிஸ்து தம் சபையில் இசைக்கருவிகள் வாசிப்பதை ஏற்றுக்கொள்ளுகிறாரா?

2. நாம் யாரைப் பிரியப்படுத்துகிறோம் மனுஷனையா, தேவனையா. அதோடு நாம் சரித்திரத்தில் கவனித்தால் பழங்காலத்திலே சபைகள் இசைக்கருவிகளைப் பயன்படுத்தவில்லை என்பதை அறியலாம், கலா. 1:10.

3. கி.பி. 325 ல் counsel of Nicene ல் மேசியாவின் ஆலோசனைக் குழுவில் இசைக்கருவி குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை. ஏனென்றால், அப்பொழுது யாரும் அதைப் பயன்படுத்தவில்லை.

4. கி.பி. 1,054 ல் ரோமன்கத்தோலிக்க சபையும், கிரேக்கு ஆர்த்தோடாக்ஸ் சபையும் பிரிந்து போனார்கள். இன்றைக்கு கிரேக்கு ஆர்த்தோடாக்ஸ் சபையாரிடத்தில் இசைக் கருவிகளைப்பற்றி கேட்டால் அவர்கள் பதிலாக நாங்கள் அவைகளை எப்போதும் பயன்படுத்தியது இல்லை என்பார்கள்.

5. மறுசீரமைப்பு என்கிற காலத்தில் John Calvin, Zingly, Tyndale ஆகிய தலைவர்கள் இசைக்கருவிகளை தேவையற்றது என்று தள்ளிவிட்டார்கள். ஏனென்றால், அவைகளை பயன்படுத்தக்கூடிய அதிகாரத்தை அவர்கள் புதிய ஏற்பாட்டில் கண்டுபிடிக்கவில்லை.

6. 19 ம் நூற்றாண்டில் வெவ்வேறு சபைகளில் இசைக்கருவிகளை பயன்படுத்துவதற்கு சாதகமாக பழைய ஏற்பாட்டு வசனங்களைப் பயன்படுத்தினார்கள் அல்லது சுட்டிக் காட்டினார்கள்.

## I. இசைக்கருவிகள் பயன்படுத்துவது பழைய ஏற்பாட்டில் கட்டளையாக இருந்தது.

A. அது கர்த்தரின் கற்பனை, அவன், தாவீதும், ராஜாவின் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத்தும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும் கற்பித்தபடியே, கைத்தாளங்களையும், தம்புருகளையும், சுரமண்டலங்களையும் வாசிக்கிற லேவியரைக் கர்த்தருடைய ஆலயத்திலே நிறுத்தினான்; இப்படிச் செய்யவேண்டும் என்கிற கற்பனை கர்த்தரால் அவருடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு உண்டாயிருந்தது,'' 2 நாளா. 29 : 25.

B. இது இஸ்ரவேலுக்குப் பிரமாணம், யாக்கோபின் தேவன் விதித்த நியாயமுமாயிருக்கிறது. சங். 81 : 1, 4.

C. பிற்பாடு தாவீது: லேவியர் ஒழிய, வேறொருவரும் தேவனுடைய பெட்டியை எடுக்கலாகாது; தேவனுடைய பெட்டியை எடுக்கவும், என்றைக்கும் அவருக்குப் பணிவிடைசெய்யவும், அவர்களை கர்த்தர் தெரிந்துகொண்டார் என்றான். 1 நாளா. 15: 2,16; 2 நாளா. 5:11–14; 29:25.

D. கர்த்தருடைய பெட்டியை லேவியர் மாத்திரமே தொடவேண்டும் என்பதைப்போல லேவியர்கள் மாத்திரமே இசைக்கருவிகளை வாசிக்கவேண்டும்; வேறு கோத்திரத்தார் அல்ல.

**II. இன்றைக்கு பழைய ஏற்பாடாகிய நியாயப் பிரமாணத்தைப் பயன்படுத்துவதற்கு நமக்கு உரிமையில்லை.**

A. ஏனென்றால், நாம் நியாயப்பிரமாணத்தைப் பயன்படுத்தினால் அதைப்பற்றி இயேசுவானவர் சொன்னதை கவனிக்கவேண்டும். கலா.5:4.

நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல. நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். [மத். 5: 17, 18]. ஆனால், ஒருவர் அதை நிறைவேற்றினால் ஒழிந்துபோகும்.

B. கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார், ரோமர். 10 : 4; ரோம. 7: 1, 4. அது ஒழிந்துபோயிற்று.

C. சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, எபே. 2 : 15. ''நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து, கொலோ. 2 : 14.

D. கிறிஸ்து இஸ்ரவேல் கோத்திரத்தில் ஒருவராக பிறந்து, ஒரு இஸ்ரவேலனாக சிலுவையின் மரணம்வரை எல்லாக் கட்டளைகளையும் நிறைவேற்றி அதை ஒழித்தார். ஆகையால் இனி கிறிஸ்துவின் சிலுவைமரணம் முதற்கொண்டு நியாயப்பிரமாணம் யாரையும் கட்டுப்படுத்தாது.

E. அதுமட்டுமல்ல பழைய ஏற்பாட்டைக் கைக்கொள்ளவேண்டும் என்று சொல்லுகிறவர்கள் தேவனைச் சோதிக்கிறவர்கள், கலக்குகிறவர்கள் மற்றும் புரட்டுகிறவர்கள் என்று வேதம் சொல்லுகிறது. அப். 15 : 10, 24. ஏனென்றால், பழைய ஏற்பாடு இஸ்ரவேலருக்கு மட்டும் கொடுக்கப்பட்டது, உபா. 5 : 1, 2; யாத். 33: 16; 19:5, 6. நமக்கு அல்ல.

**III. புதிய ஏற்பாட்டில் இசைக்கருவிகள் பயன்படுத்தினார்கள் என்பதற்கு வசனமோ, சம்பவமோ அல்லது ஆதாரமோ இல்லை.**

A. சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, எபே. 5 :19. கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங் களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி, கொலோ.3: 16.

B. மேற்கண்ட இந்த வசனங்கள் இசைக்கருவிகளைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை; அப்படிச் சொல்லுகிறது என்று யாராகிலும் சொன்னால் அது ஏற்றுக்கொள்ளப்படத்தக்க விளக்கமல்ல, தவறான விளக்கம்.

C. இசைக்கருவிகளின் சத்தத்தினால் அல்ல, தேவனுடைய வசனத்தினால் மாத்திரம் விசுவாசம் வரும். ''ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்,'' ரோமர். 10:17.

D. மத்தேயு 26:30 ல் இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஸ்தோத்திரப்பாட்டை பாடினபோது அவர்கள் இசைக்கருவிகள் பயன்படுத்தவில்லை. ''அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்.''

E. வெறும் ஒலியினால் அல்ல, சத்தியத்தை அறிகிற அறிவினால் இரட்சிப்புவரும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவடையவும், அவர் சித்தள்ளவராயிருக்கிறார்,1 தீமோ 2 :4.


1. ஆகையால், வேற்று மொழிகளைவிட சொந்த மொழியில் சத்தியம் சொல்லித்தரப்படவேண்டும் என்பது தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. ஏனென்றால், புரிந்துகொள்ளுதல் என்பது மிகவும் அவசியம், மத். 13:19.


2. ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியிலே இரகசியங்களைப்பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்.

3. அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்; தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ சபைக்கு பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்,'' 1 கொரி. 14 : 2 – 4, 14, 15.

தொடரும்... ✝


## 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

















# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Tuesday 6.30 - 7.00 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
Every Tuesday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026





"Registered" with RNI No: TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.


# எங்களது இதர வெளியீடுகள்

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்






















**தபால் செலவிற்கு**
**பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு
இது ஓர் அரிய வாய்ப்பு.
ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.
விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

To:

## திருமறை தியானம்

**நம்பிக்கை** தொலைக்காட்சியில்

| | |
|---|---|
| செவ்வாய் | காலை 6:30 – 7:00 மணி |
| வெள்ளி | காலை 6:30 – 7:00 மணி |

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.